**இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ("பல்கலைக்கழகம்") 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

--------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக

காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07 இன் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் ஒன்றாக கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் அவை தனித்தனியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,712,073,167 தொகையான பல்கலைக்கழகத்தின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியானது காணியின் பெறுமதியை தனியாக காட்டாமல் ஒன்றாக சேர்த்துக் காட்டப்பட்டிருந்தது. | ஈயூஎஸ்எல் இற்குச் சொந்தமான காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு செயன்முறை என்பன முன்னேற்றகரமாக காணப்படுகின்றன. அச் செயன்முறை பூர்த்தியடைந்ததும் மீள்பெறுமதியிடப்பட்ட தொகை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தனியாக காட்டப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி தனித்தனியாக காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 210.3 ஹெக்டெயர் மொத்தப் பரப்பளவான 11 காணிகள் மற்றும் அவற்றின் கட்டிடங்கள் பெறுமதியிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | ஈயூஎஸ்எல் இற்குச் சொந்தமான காணியின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் கட்டிடங்களின் மீள்மதிப்பீட்டு செயன்முறை என்பன முன்னேற்றகரமாக காணப்படுகின்றன. அச் செயன்முறை பூர்த்தியடைந்ததும் அவை நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்படும். | உரிய அதிகாரியால் மீள்மதிப்பீட்டுச் செயன்முறையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காணியின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஆ) | தொடர்பாடல் மற்றும் வணிக கற்கைகள் பீடத்திற்கான 5 மாடிக் கட்டிடத்தொகுதி மற்றும் திருகோணமலை வளாகத்தின் கேட்போர் கூடத்திற்கான இரண்டு மாடிக் கட்டிடத்தொகுதி என்பவற்றின் நிர்மாணத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 75 மில்லியன் தொகை நடைமுறை வேலைக் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இந்த ரூபா 75 மில்லியன் தொகை செயற்திட்ட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்காக 10% பகுதி வேலை ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக இது வேலை ஆரம்பிப்பு முற்பணமாக கருதப்பட வேண்டியதுடன் கடன்பட்டோராக கணக்கிற்கு எடுக்கப்பட வேண்டும். (2018 ஆம் ஆண்டு நிதிக்கூற்றின் குறிப்பு 22 ஐ தயவுசெய்து பார்க்கவும்) | நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தல் தவறுகளை தவிர்ப்பதற்காக செயன்முன்னேற்ற அறிக்கைகளை கருத்தில் கொள்வதற்கு உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்கான பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சிகள் மற்றும் புலமைப்பரிசில்களிற்காக கல்விசார் பதவியணியினரிற்கு ரூபா 506,258 தொகை | இது சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் வகைப்படுத்தல் தவறுகளை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது கற்பனைச் சொத்துக்கள் கணக்கிற்கு தாக்கல் செய்வதற்குப் பதிலாக ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. | | வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் எஸ்வீஜஏஎஸ் மற்றும் பல்லலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றிடமிருந்து பெறவேண்டியதாக முறையே ரூபா 9,751,892 மற்றும் ரூபா 1,408,946 தொகைகள் காட்டப்பட்டிருந்த போதிலும் பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியதாக மேற்படி நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் அம் மீதிகள் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் அம் மீதிகளின் சரியான தன்மை, நம்பிக்கைத் தன்மை மற்றும் அறவீடு செய்யும் தன்மை என்பவற்றை கணக்காய்வில் சரிபார்க்க முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் எஸ்வீஜஏஎஸ் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றிடமிருந்து பெறவேண்டியதாக முறையே ரூபா 9,751,892 மற்றும் ரூபா 1,408,946 தொகைகள் காட்டப்பட்டிருந்தன. அத் தொகைகள் முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தன. அவற்றை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொருத்தமான கணக்கீட்டு நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 9,400,000 தொகையான வழியிலுள்ள காசு ரூபா 9,300,319 தொகையான சில்லறைக் கடன்பட்டோராக மாற்றப்பட்டிருந்தது. எனினும் முன்னைய ஆண்டு மீதிகளின் மேற்படி மாற்றங்கள் | ரூபா 9,400,000 தொகை வெளியகக் கற்கைகளிற்காக செலுத்தப்பட வேண்டியதாக உள்ளது. இது 2002 ஆம் ஆண்டிலிருந்து வெளிக் கற்கைகளிலிருந்து கடனாக பெறப்பட்ட தொகையானதுடன் இது முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களில் வழியிலுள்ள காசாக பிழையாக | கணக்கீட்டுத் தவறுகளை சீர்செய்வதற்கும் மேலும் தாமதமின்றி இவ் விடயங்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக பல்கலைக்கழகம் எந்தவொரு சான்றினையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | காட்டப்பட்டிருந்தது. | |
| (ஊ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான திருகோணமலை வளாகத்தின் வாகனம் மற்றும் ஐரீ அபிவிருத்திக்கான பெறுமானத்தேய்வு ரூபா 8,818,186 ஆக காணப்பட்டது. எனினும் இத் தொகை நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,641,750 ஆக காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,176,436 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் இற்கு இணங்க 2017 ஆம் ஆண்டில் அனைத்து வாகனங்களையும் மீள்பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ் விடயத்தை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்த பெறுமதியை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,279,124,194 தொகையான நிலையான சொத்துக்களின் இறுதி மீதி மீளாய்வாண்டின் போது ரூபா 3,273,604,684 தொகையான ஆரம்ப மீதிகளாக நடைமுறை ஆண்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்ததால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,519,510 தொகையான | முன்னைய ஆண்டு நட்டங்களின் சீராக்கம் மற்றும் செலுத்த வேண்டிய நிறுத்திவைத்தல் பணம் காரணமாக இது ஏற்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் மீதிகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. | | |
| (ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உப வேந்தர் நிதியத்தின் மீதி ரூபா 2,194,647 ஆக காணப்பட்டது. நிதிக்கூற்றுக்களிற்கான பட்டியல்களின் பிரகாரம் அந் நிதியம் ரூபா 2,340,078 ஆக இருந்தால் இது ரூபா 145,431 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாட்டை விளைவித்திருந்தது. | செயற்பாட்டுச் சிக்கல் காரணமாக வீசீ நிதியம் செயற்படுத்தப்படாததால் கடந்த காலத்தில் வீசீ நிதியத்திற்கு பதிலாக மீண்டெழும் கணக்கிற்கு சில கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆகையால் இவ் வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் அடுத்த ஆண்டுக் கணக்குப் புத்தகங்களில் இது சீர்செய்யப்படும். | இந் நிதிய மீதியை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

மீளாய்வாண்டின் போது பின்வரும் 02 கணக்கு விடயங்களின் ரூபா 230,328,305 தொகையான மீதிகள் தொடர்பாக அவ் விடயங்களிற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| சில்லறைக் கடன்கொடுத்தோர் | 35,097,491 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | தேவையான விபரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்கு மீதிகளை சரிபார்ப்பதற்கான சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| சில்லறைக் கடன்பட்டோர் | 195,230,814 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் வயதுப் பகுப்பாய்வு | | |
| காணி மற்றும் கட்டிடம் | 4,327,479,889 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, விபரமான | | |

| | | |
|---|---|---|
| | பட்டியல்கள் மற்றும் ஆரம்ப மீதிகள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கை | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1 ஆண்டு தொடக்கம் 15 ஆண்டுகள் வரையான காலவீச்சில் ரூபா 173,439,127 தொகையான பிணைமுறிகளை மீறிய 73 விரிவுரையாளர்களிடமிருந்து பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தவணைகடந்த 74 பிணைமுறிகள் உள்ளடங்கிய 12 வழக்குகள் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காகவும் தவணை கடந்தவர்களிடமிருந்து பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்காகாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் சட்ட நடவடிக்கை முன்னேற்றகரமாக உள்ளது. | தவணை கடந்தவர்களிடமிருந்து மேலும் தாமதமின்றி பெறவேண்டியவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 765,844 தொகையான பிடித்துவைத்தல் வரி, பெறுமதிசேர் வரி மற்றும் வியாபார புரள்வு வரி 2019 மே வரை உரிய அதிகாரிகளிற்கு அனுப்பப்படாமல் 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. | இது ஒன்றுசேர்க்கப்பட்டு 1998 இலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் ஏடுகள் எதுவும் காணப்படவில்லை. ஆகையால் உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய அதிகாரிகளின் அங்கீகாரத்துடன் பெறுமதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 73,440 தொகையான சில்லறைக் காசு முற்பணம் பல்லகலைக்கழகத்தால் 2010 தொடக்கம் 2015 வரை பல்வேறு நோக்கங்களிற்காக வழங்கப்பட்டிருந்தது. எனினும் அத் தொகை இவ் அறிக்கைத் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அதில் 2018 திசெம்பர் 31 வரை தீர்ப்பனவு செய்யப்படாத சில்லறைக் காசுத் தொகை ரூபா 73,439 ஆக இருந்தது. அதனை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| **சட்டம்/ பணிப்புரைக்கான தொடர்பு** | | **விபரம்** | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | | |
| (அ) | நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2019 மே 22 வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 | மீளாய்வாண்டின் போது ரூபா | உண்மையான | அரச நிதிச் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 100,000 தொகையான செயல்நிமித்தக் கட்டுநிதியின் ஆகக் கூடிய எல்லையை விஞ்சி 08 சந்தர்ப்பங்களில் 03 உத்தியோகத்தர்களிற்கு ரூபா 1,497,812 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தேவைகளை அடிப்படையாகக் கொண்டு முறையான அங்கீகாரத்துடன் தொகைகள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அனைத்தும் உரிய காலத்தில் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன. | சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட எல்லையினுள் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைகள் சபையின் 2004 சனவரி 26 ஆம் திகதிய 2004/எல்ஐபீ/01 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 94,437,278 தொகையான நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2019 மே 22 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நூலகம் 89,000 புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளை கொண்டுள்ளது. மேலும் வருடாந்த மெய்மையாய்வு செயன்முறையானது அரையாண்டு அடிப்படையில் நடாத்தப்படுகின்ற கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை பாதிக்கும். எனினும் நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நூலக புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 345,563,842 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 334,815,279 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 10,748,563 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆளணி வேதனங்கள் ரூபா 208,069,613 ஆலும் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினங்கள் ரூபா 61,899,201 ஆலும் அதிகரித்தமை இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீண்டெழும் மானியம் மற்றும் ஆளணி வேதனங்கள் என்பன பிரதான வருமான மற்றும் செலவினங்களாக இனங்காணப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது

மீளாய்வாண்டிற்கான ஆளணி வேதனங்கள் 23% அதிகரிப்பை சுட்டிக்காட்டி ரூபா 899,303,660 தொடக்கம் ரூபா 1,107,373,273 வரை அதிகரித்திருந்தன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மீண்டெழும் மானியம் 23% அதிகரிப்பை சுட்டிக்காட்டி ரூபா 1,193,688,000 தொடக்கம் ரூபா 1,477,100,000 வரை அதிகரித்திருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு வருமானம் 27% அதிகரிப்பை சுட்டிக்காட்டி ரூபா 1,331,144,325 தொடக்கம் ரூபா 1,688,086,453 வரை அதிகரித்திருந்தது.

நடைமுறை மற்றும் முன்னைய ஆண்டுகளிற்கான மொத்த செயற்பாட்டு வருமானத்துடன் ஆளணி வேதனங்களை ஒப்பீடு செய்யும் போது மொத்த செயற்பாட்டு வருமானத்தின் முறையே 65% மற்றும் 67% என்பன ஆளணி வேதனங்களிற்காக மாத்திரமே செலவிடப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நடைமுறை விகிதம் முறையே 3.6:1 மற்றும் 2.7:1 ஆக காணப்பட்டமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 33% முன்னேற்றமொன்றை சுட்டிக்காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கிழக்குப் பல்கலைக்கழகம் விரிவுரையாளர் (தகுதிகாண்) பதவிக்காக விண்ணப்பதாரியொருவரை நியமனம் செய்திருந்ததுடன் தெரிவு செய்யும் செயன்முறையில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக இந்த | தெரிவுக் குழுவானது தேவையான அனைத்து தரங்கள், தகைமைகள் மற்றும் செயலாற்றலினை கருத்தில் கொண்டு பொருத்தமான நபரை தெரிவு செய்திருந்தது.<br><br>384/2005 ஆம் இலக்க கட்டளை | நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 இன் பிரகாரம் அவ் விரிவுரையாளரின் தெரிவு மற்றும் நியமனத்திற்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு |

நியமனத்தை இரத்துச் செய்யுமாறு பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபை (யூஎஸ்ஏபீ) கட்டளையிட்டிருந்தது. யூஎஸ்ஏபீ இன் கட்டளையை அமுல்ப்படுத்துவதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 2005 யூன் 13 ஆம் திகதி வரை வலிதான 2005 மே 10 ஆம் திகதிய தடையாணை (stay order) வழங்கப்பட்டிருந்தது. தடையாணையின் காலாவதியாகுதலை கருத்தில் கொள்ளாமல் அவ் விரிவுரையாளர் இப் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - II இற்கு பதவியுயர்த்தப்பட்டு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சம்பளத்துடனான பிஎச்டி கற்கைகளை தொடர்வதற்கான புலமைப்பரிசில் என்பன வழங்கப்பட்டிருந்தன.

அவ் விரிவுரையாளர் அவரது கற்கைகளை பூர்த்தி செய்திருக்காததுடன் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 4,545,418 தொகையான பிணைமுறி பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவர் வருகை விரிவுரையாளராக நியமனம் செய்யப்பட்டு இது தொடர்பாக ரூபா 290,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தால் ஒருதலையாக மூலம் மேற்படி தீர்மானத்திறகெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தடையாணை வழங்கப்பட்டிருந்தது. பின்னர் ஈயூஎஸ்எல் பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் II ஆம் பிரிவின் 27:3 ஆம் பிரிவின் பிரகாரம் பிஎச்டி ஐ தொடர்வதற்கு கற்கை விடுமுறையை வழங்கியிருந்ததுடன் வழமையான நடைமுறையொன்றாக அவ் விரிவுரையாளரிற்கு தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தையும் வழங்கியிருந்தது.

2016 திசெம்பர் 28 இல் முறையான பாதையொன்றினூடாக அவ் விரிவுரையாளரிற்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது. தற்போது வருகை நியமனம் நிறுத்தப்பட்டு கொடுப்பனவுகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

செய்வதற்கும் அதன் பின்விளைவுகளிற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அவ் விரிவுரையாளரிடமிருந்து நிலுவையாகவுள்ள பிணைமுறி பெறுமதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வருகை விரிவுரையாளராக அவ் விரிவுரையாளரை நியமனம் செய்தமைக்கு பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர்கள் மீது பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(exparte) வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் இழப்பீடாக வாதிக்கு (plaintif) ரூபா 1,000,000 தொகையை செலுத்துவதற்கு பல்கலைக்கழகத்திற்கு கட்டளையிடப்பட்டிருந்தது. பல்கலைக்கழகம் இக் கட்டளைக்கெதிராக சட்டக் கட்டணங்களாக ரூபா 257,650 தொகையை செலவிட்டிருந்தது.

எனினும் பல்கலைக்கழக சபை இவ் வழக்கை கைவிடுவதற்கு தீர்மானித்திருந்ததுடன் ரூபா 500,000 தொகை பல்கலைக்கழக நிதியத்திலிருந்து வாதிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திருகோணமலை வளாகத்தின் முன்னாள் தலைவர் (முகாமைத்துவத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் - I) நிதி முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டுக்களிற்காக அவரது பதவி முடிவுறுத்தப்பட்டும் பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டும் இருந்தார். அவர் பின்னர் முடிவுறுத்தப்பட்ட திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டிருந்ததுடன் முறைப்பாட்டுக் குழுவின் (grievance committee) பரிந்துரையை அடிப்படையாகக் கொண்டு அவரிற்கு அனைத்து சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தது. அவ் விரிவுரையாளர் 2018 சனவரி 27

சபையானது ஏற்றுக்கொள்ளல் கடிதத் திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஈயூஎஸ்எல் இற்கு செலுத்த வேண்டிய அனைத்தையும் தீர்ப்பனவு செய்யுமாறு அவரது பதவி விலகல் விடயத்தை 2018 சனவரி 21 இல் நடைபெற்ற 283 ஆவது கூட்டத்தில் ஏற்றுக்கொண்டிருந்தது.

அவர் அவ்வாறு செய்யத் தவறியிருந்ததால் அவரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் தாமதமின்றி இவ் விடயத்தை தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இலிருந்து அவரது பதவியிலிருந்து விலகியிருந்ததுடன் அதே நாள் கொழும்பில் புதிய வேலையொன்றில் இணைந்திருந்தார். சபை அவரது கட்டாய கடப்பாட்டு சேவை மற்றும் 2019 ஆம் ஆண்டு வரையான பிணைமுறி உடன்படிக்கை என்பவற்றை கருத்தில் கொள்ளாமல் அவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்டிருந்தது. இது தொடர்பாக பல்கலைக்கழகம் ரூபா 11,563,675 தொகையை செலவிட்டிருந்தது. எனினும் ஒழுக்காற்று விசாரணை நடைமுறைகளிலுள்ள சில குறைபாடுகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் தவறான செயல்கள் (malpractices) காரணமாக மேற்படி விடயம் இன்னமும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்பட்ட மாணவர்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 12 சதவீதத்திற்கு சமமான 1948 இலிருந்து 1715 வரை குறைவடைந்திருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை. பல்வேறு காரணிகள் மீது சார்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மாணவர்களை ஒதுக்கீடு செய்தல் அல்லது சேர்த்துக்கொள்ளல் செயன்முறை முழுமையாக கையாளப்படுகின்றதுடன் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைதல் எங்களது | மாணவர்கள் குறைவடைவதற்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சேர்த்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையை |

| | | |
|---|---|---|
| | கட்டுப்பாட்டிற்கு அப்பால் காணப்படுகின்றது. அத்துடன் யூஜீசீ ஆல் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களை பல்கலைக்கழகம் சேர்த்துக்கொள்ளுகின்றது. | அதிகரிப்பதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதிகளை குறைவாக பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நூலகத்தில் Gender Equity அல்லது Equality Cells Establishment of Reservation இற்கான நிலையம் மற்றும் Conservation Unit என்பவற்றை மேற்கொள்வதற்கு முறையே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து ரூபா 1,000,000 மற்றும் ரூபா 1,000,000 தொகையான மானியங்கள் பெறப்பட்டிருந்தன. எனினும் அவ் மானியங்கள் 02 ஆண்டுகளிற்கு மேலாக குறிப்பிடப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்படாமல் கணக்குகளில் காணப்பட்டன. | பின்வரும் செயற்திட்ட நடவடிக்கைகள் முன்னேற்றகரமாக உள்ளன.<br><br>மாணவர்களிற்கான பல செயலமர்வுகள் மாணவர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக இரத்துச் செய்யப்பட்டு பிற்போடப்பட்டிருந்ததுடன் அப்போது மாணவர்கள் மீளாய்வுக் காலத்திலும் பரீட்சைக்கும் சென்றிருந்தனர். எனவே இதனை நடாத்த முடியாதிருந்தது.<br><br>மூலதன விடயங்கள் போன்ற ஏனைய கொள்வனவுகள் முன்னேற்றகரமாக உள்ளன. சர்வதேச பெண் பிள்ளைகள் தினம் 2016 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டிருந்ததுடன் முன்னோக்கி 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் மாணவர் காணப்படாததன் காரணமாக நடாத்தப்பட முடியாதிருந்தது. அனைத்து செயற்பாடுகளும் மீளப் | தாமதமின்றி குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக மானியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பட்டியலிடப்பட்டு பணம் பயன்படுத்தப்படும்.

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் (ஈயூஎஸ்எல்) ரூபா 22,573,400 தொகையான ஈயூஎஸஎல் இன் களுவன்கேணியிலுள்ள விவசாய பீடத்திற்கான நுழைவு வீதி நிர்மாணத்தை (கட்டம் - 1) வழங்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| • 2007 மே 04 ஆம் திகதிய பெறுகை கைநூலின் பின்னிணைப்பு – 9 இன் 5.3.5 ஆம் பிரிவிற்கு முரணாக கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்டு மேற்படி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | ஐசீரீஏடி சீ 6 அல்லது மேற்பட்ட தரத்துடன் பிரசுரித்து என்சீபீ முறையூடாக கேள்வி கோரப்பட்டிருந்தது. ஒரு கேள்விதாரர் மாத்திரம் கேள்வி சமர்ப்பித்திருந்ததால் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் தகுதியுடைய ஒப்பந்ததாரரிற்கு இது வழங்கப்பட்டிருந்தது. | ஐசீரீஏடி விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் பெறுகைக் கைநூலின் பிரகாரம் நிர்மாணத்தின் கேள்வி நடைமுறையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு (ஆர்டிஏ) இணைக்கப்பட்ட பொறியியலாளர் ஒருவர் ஒப்பந்த வேலைகளின் பொறியிலாளராக செயற்பட்டிருந்ததுடன் அவர் குறித்த ஒப்பந்தத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார். | பொறியியலாளர்/ வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்திருந்ததால் அவர் செயற்திட்டத்திற்கு பொறியியலாளர் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. வேலைப் பொறியியலாளர்/ ஈயூஎஸ்எல் செயற்திட்டத்திற்கான | பெறுகை மற்றும் ஐசீரீஏடி வழிகாட்டல்களிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொறியியலாளராக உள்ளதுடன் அவர் கொடுப்பனவுகளிற்கான அனைத்து அளவீட்டுப்பட்டியல்களையும் உறுதிப்படுத்தியிருந்தார். | |
| • இரண்டு காலநீடிப்புக்கள் முறையே 2007 இன் ஐசீரீஏடி/எஸ்பீடி/14 ஆம் ஒப்பந்த நிபந்தனையின் 28 ஆம் பிரிவு மற்றும் 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.14.1 ஆம் பிரிவு என்பவற்றிற்கு முரணாக ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் இல்லாமல் நிறைவேற்றுவதற்காக ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டி தொடர்பு 4.2.2 இன் பிரகாரம் இவ் வேலைக்காக நிர்மாணக் காலப்பகுதி 30 வாரங்கள் (7.5 மாதங்கள்) அனுமதிக்கப்பட முடியாதிருந்ததுடன் அவசர நிலைமையை கருத்தில் கொண்டு ஒரு மாதத்திற்குள் வேலை பூர்த்தி செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இப் பிரதேசத்தில் ஏற்பட்ட எதிர்பாராத மழை மற்றும் வெள்ளம் காரணமாக காலநீடிப்பை வழங்குவதற்கு நாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தோம். | முறையான பெறுகைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) கல்விசார் பதவியணியினரின் நிரந்தர அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 284 ஆக உள்ளதுடன் உள்ளபடியான பதவியணியினர் 204 ஆக உள்ளது. 80 வெற்றிடங்களில் 23 வெற்றிடங்கள் பேராசிரியர்களிற்கு | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை பல தடவைகள் கல்விசார் பதவிகளை விளம்பரப்படுத்துவதற்கு பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் பதவியணி வெற்றிடங்களிற்கு | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரியதாகும். கல்விசார் பதவியணியினரில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் நான்கு விரிவுரையாளர்களிற்கு சபடிகல் விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. | நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | |
| (ii) | கல்விசாரா பதவியணியினரில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை 93 ஆக இருந்ததுடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 876 ஆம் இலக்க யூஜீசீ சுற்றறிக்கையின் பிரகாரம் உயர் கல்வி அமைச்சிடமிருந்து பெயர்ப் பட்டியலை பெற்றுக்கொள்வதன் மூலம் சிற்றூழியர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளிற்கான வெளியக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அப் பட்டியலை நாங்கள் பெற்றுக்கொண்டிருக்காததால் இதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | தாமதமின்றி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட கூட்டிணைந்த திட்ட வழிகாட்டலின் பிரகாரம் நடப்பாண்டில் ஆரம்பித்து அடுத்த நான்கு ஆண்டுகள் வரையான 5 தொடர்ச்சியான ஆண்டு | ஆளுகை தரப்பினரின் (Senate) பரிந்துரையின் பிரகாரம் இலங்கை தரக் கட்டமைப்பு (Sri lanka Quality Framework) (SLQF), நிறுவக ரீதியான மீளாய்வு கைநூல் (Institutional Review Manual) (IR) மற்றும் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுக் கைநூல் போன்ற | 2018–2022 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

காலப்பகுதியின் போது அனைத்து நிறுவனம் தொடர்பான போதியளவான தகவல்கள் மற்றும் அதன் இறுதி இலக்கு என்பவற்றை கூட்டிணைந்த திட்டம் கொண்டிருக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் பதவியணியினர் அபிவிருத்தி நிலையம் ரூபா 1,019,175 கிரயத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டத்தின் மீளாய்வு, தற்போதைய நிலை மற்றும் எதிர்கால பணிப்புரைகள் தொடர்பாக இரண்டு செயலமர்வுகளை நடாத்தியிருந்த போதிலும் 2018–2022 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

புதிய திறன் மதிப்பீடுகளை (benchmarks) ஒன்றிணைத்தும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்கவும் தலைவர்/ எஸ்பிஎஸ்யூ ஆல் 2019–2023 காலப்பகுதிக்கான தந்திரோபாயத் திட்டத்தின் வரைபு அறிக்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய என்பி/எஸ்பி/எஸ்டிஜீ/17 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ என்பவற்றின் பிரகாரம் பல்கலைக்கழகம் அதன் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தொழிற்பாடுகளை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக அறிந்திருந்த போதிலும் அத் தொழிற்பாடு தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் | சபையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது 2019–2023 காலப்பகுதிக்கான தந்திரோபாயத் திட்டத்தில் இவ் விடயத்தை ஈயூஎஸ்எல் ஏற்கனவே கருத்தில் கொண்டிருந்தது. தயவுசெய்து 2.2(ஆ) மற்றும் (இ) பந்திகளை பார்க்கவும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளிற்காக இலக்குகள் மற்றும் கேபிஐ (செயலாற்றல் சுட்டியை வைத்திருத்தல்) இனை உருவாக்குவதற்கும் இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மற்றும் அவ் இலக்குகளை அடைந்துகொள்வதற்கான இலக்கு கட்டங்கள் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதை அளவீடு செய்வதற்கான சுட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.